# வீரஞ்செறிந்த வன்னி மண்ணும் தமிழ் அரசுகளும்

தொல்பழங்காலத்தில் இருந்து மாற்றானுக்கு மண்டியிடாத அரசாக வன்னி அரசும் வன்னி மண்ணும் காணப்பட்டது. வன்னிப் பெருநிலப்பரப்பின் எல்லைகளாக வடக்கே யாழ்ப்பாண நீரேரியும் தெற்கே அநுராதபுரமும் கிழக்கே திருகோணமலையும் மேற்கே மன்னாரும் இருந்ததென 1890 இல் ஆங்கிலேயரின் வன்னி மாவட்ட ஆட்சித் தலைவரான யே.பி.லூயிசு 'வன்னிக் குறிப்பு' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே பழந்தமிழ் மக்கள் இப்பகுதியில் வாழ்ந்து வந்தமைக்கும் ஆட்சி செய்து வந்தமைக்கும் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. பெரிய புளியங்குளத்தில் முப்பத்தைந்து பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில தமிழ்ப் பிராமி எழுத்துகளைக் கொண்டவையாகும். இவற்றின் மூலம் தமிழ்ச் சிற்றரசுகளின் ஆட்சிச் சிறப்பு வணிகச் சிறப்பு என்பவற்றை அறிய முடிகின்றது. மேலும் பொன்பரிப்பு, மாதோட்டம், குஞ்சுப்பரந்தன் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள், எலும்புக்கூடுகள் என்பன இலங்கையின் பழங்குடியினர் தமிழர் என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளன.

1989,1990 ஆம் ஆண்டுகளில் பூநகரிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின்போது மட்கலங்கள், கட்டிட அழிவுகள், கிரேக்க, உரோம, சீன, அரேபிய காசுகளும் சோழ, பாண்டிய யாழ்ப்பாண அரசுகளின் காசுகளும் கண்டெடுக்கப்பட்டன. பூநகரியில் கண்டெடுக்கப்பட்ட அகழ்வுப் பொருட்கள் கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை ஒத்தவையாகக் காணப்படுவதனால் கந்தரோடைக்கு நிகரான தலைநகராக பூநகரி இருந்தமை புலனாகின்றது. இது தவிர முத்தையன்கட்டு பனங்காமம் பகுதிகளில் இடைக்கால, பிற்கால தலைநகரங்கள் இருந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன.

பழந்தமிழர்களான நாகர்களுக்கும் வன்னி மண்ணுக்கும் இருந்த தொடர்புகளுக்கு நாகதேவன்துறை, நாகபொக்கணை போன்ற இடப் பெயர்களும் நாகபடுவான்குளம் போன்ற குளப் பெயர்களும் சான்றாகக் காணப்படுகின்றன. மேலும் தமிழில் நீர் நிலைகளைக் குறிக்கும் சொற்களான குளம், கேணி, வாய்க்கால், கட்டு, ஓடைமறிப்பு, முறிப்பு, மோட்டை, வில், தண்ணி போன்றவற்றைக் கொண்ட ஊர்ப்பெயர்களையும் வன்னியில் காணலாம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாண அரசின் ஆளுமையை ஏற்று வன்னிச் சிற்றரசுகள் தனியாக இயங்கி வந்தன. யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் பின் வன்னியை ஆண்ட கயிலைவன்னியனும் பண்டாரவன்னியனும் தமிழருக்குப் பெருமை சேர்த்தனர். மேலும் அரச குல மகளிரான நல்லநாச்சி, சிதம்பரநாச்சி போன்றோரின் வீரம் பற்றியும் அறிய முடிகின்றது.

இத்தகைய சான்றுகள் அனைத்தும் வன்னி மண்ணில் தமிழர்கள்தான் தொல்குடியினர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. தமக்கெதிரான போர்களின் போதெல்லாம் வன்னியரசர்களும் வன்னி மக்களும் தமது உறுதியான எதிர்ப்பினை வெளிப்படுத்தி வந்துள்ளனர். வீரஞ் செறிந்த இவர்களின் போர் வலிமையாலும் உணர்வினாலும் வன்னி மண் அடங்காப்பற்று எனச் சிறப்பாக அழைக்கப்பட்டது.